**வரகாபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 26 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் வரகாபொல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு குறைபாடுகள் | | |
| | மிளாய்வாண்டில் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயத்தை இனங்கர்ணாது ரூபா 220,076 ஆன விற்பனையால் கிடைத்த தொகையை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்து. | நிலையான சொத்து அகற்றுவதை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொண்டேன். எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக கூற்றுக்களில் உள்ளடங்கிய 17 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் குறித்த துணைப்பதிவேடுகளின் மீதிகளிற்கிடையில் ரூபா 45,767,064 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் மீதிகளிற்கிடையில் வேறுபாட்டடை ஒப்பிட்டு சரிசெய்ய | பதிவேடுகள் பராமரிப்பில் நிலவும் பிழைகள் மற்றும் உழியர் கடன், பொது வைப்பு பதிவேடுகள் பல ஆண்டுகளிலிருந்து சரியாக சமப்படுத்தாமையால் நிதிக் கூற்றுகளில் மற்றும் துணைபதிவேடுகளில் இத்தகைய வித்தியாசம் நலவுகிறது. வருடாந்தமா சரியாக பட்டியலகள் முன்கொண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டும். | வரப்பட்ட போதும் முன்னரிலிருந்து நிலவி வரும் மீதிகளில் பொருந்தாமை காணப்படகிறது. கடந்த ஆண்டுகளில் மீதிகளை பரிசீலனை செய்து கண்டறிந்து சரிசெய்ய ஆலோசனை வழங்கினேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 154,010 | வெளியிடப்பட்ட போதும் வங்கியிற்கு சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் 06 மாதங்களை விஞ்சிய 05 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாற்றப்படாத காசோலைகள் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறேன் என வினயமாக அறிவிக்கிறேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 531,608 | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 திசெம்பர் 31 வரை வைப்புகள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் 2016 திசெம்பர் 31 வரை வைப்பு செய்யப்பட்ட வைப்பு வருமானத்திற்கு எடுக்குவதற்காக விடய பொறுப்பு உத்தியோகத்தர்களிற்கு கடிதமூலமா அறிவூட்டப்பட்டுள்ளதுடன்வரு மானத்திற்கு எடுக்க முடியும என விடயபொறுப்பு உத்தியோகத்தர்களின் தகவல் கிடைத்த பின் எடனடியாக வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) நிதிப் பிரமாணம் 1646 | - | சபையின் 06 வாகனங்களுக்குரிய ஓட்ட குறிப்புகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்குரிய சபையிற்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் தின ஓட்டக்குறிப்புக்களின் சுருக்கக்குறிப்பு தயாரித்து எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை - | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய வீதவரி பெறுமான மதிப்பீடு 2007 ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடொன்றை மேற்கொள்ள வருகை தருமாறு அறிவித்து பெறமதி மதிப்பிட்டு திணைக்களத்திற்கு பலமுறை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 22,730,526 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 33,905,666 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காலத்தை கண்டறிய முடியாத ,ஓர் ஆண்டை மற்றும் 11 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 15,346 பெறுமதியான 04 மறுக்கப்பட்ட காசோலைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்துக் கொள்ள வேண்டும். | 2007 ஆண்டின் மறுக்கப்பட்டு இரண்டு காசோலைகள் மற்றும் காலத்தை கண்டறிய முடியாத காசோலைகள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதுடன் 2017 ஆண்டின் காசொலை மீது துரிதமாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 5,987,000 | 6,233,093 | 4,305,107 | 1,927,985 | 5,987,000 | 6,381,490 | 4,638,168 | 1,743,322 |
| (ii) | வாடகை | 5,325,000 | 4,909,288 | 4,151,669 | 757,619 | 6,637,000 | 4,760,666 | 4,408,087 | 352,579 |
| (iii) | ஏனைய வருமானம | 94,059,000 | 89,694,058 | 5,850,309 | 36,843,670 | 80,865,000 | 82,414,946 | 47,829,284 | 34,585,662 |

### 2.3.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,703,676 ஆன வீத வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவை மீதிகளை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவை வீத வரி தொகையை குறைத்துக்கொள்ள பல செயற்பாடுகள் எடுக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் மேலும் அறவிட வேண்டிய நிலுவை வீத வரி தொகை ரூபா 4,254,399.82 வரை குறைந்திருந்தது. |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் ஏக்கர் வரி அறவிட வேண்டிய காணிகளை இனங்கண்டு பதிவேடுகள் திருத்தப்பட்டு வருமானம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஒப்பாய்வு நடவடிக்கை மேற்கொண்டு வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன். |

### 2.3.3 ஏனைய வருமானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட 04 ஹோட்டல்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். | சுற்றுலா சபையின் பதிவு கட்டணம் அறவிடப்படாத 04 ஹோட்டளின் நிலுவை கட்டணத்துடன் இவ் வருடத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களில் செல்லுபடியாகும் காலத்தை விஞ்சியிருந்த 18 நிறுவனங்களிலிருந்து ரூபா 78,000 அறவிட வேண்டியதாக இருந்தது. | நிலுவை சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | காலாவதியான ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரக் காலத்தை நீடிக்குமாறு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வருகை தந்த நிறுவனங்களின் பொது சுகாதார பரிசோதகர் அறிக்கையை பெற்றுத்தருமாறு சுகாதார வைத்திய உத்தியோகத்தரிற்கு 2019 சனவாரி 30 திகதி மற்றும் 2019 மே 06 திகதிகளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.3.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பண ரூபா 9,763,241 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 21,372,995 ஆனது. | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிடப்பட வேண்டும். | 2018 ஜுலை மாதம் வரை அட்டவணை தயாரிக்கப்பட்டு இனுப்பிருந்த போதும் இது வரை பணம் கிடைத்திருக்கவில்லை. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செயல்களை காட்டும் முன்னேற்ற அறிக்கை தயாரித்திருக்காததன் காரணத்தால் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துக்கொள்வதனை பரிசீலனை செய்வதற்கு முடியாமலிருந்தது. | திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றத்தை பரிசீலனை செய்ய செயல் நடவடிக்கை திட்டம் பிரதியிடப்பட்டு பிரிவுப் பொருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் முன்னேற்றத்தை பரிசீலனை செய்வது பிரிவுப் பொருப்பாளர்களினால் தொடர்புடைய விடய பொருப்பாளர்களிடமிருந்து தற்போது பெறப்படுகின்றது. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 05 ஊழியர் மிகை மற்றும் 15 பதவி வெற்றிடங்கள் ஆனதுடன் சபையின் செயலாளர் பதவி மற்றும் தொழில்நுட்ப | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஊழியர்களை முறையாக்கி | நிறுவனத்தின் வெற்றிட பதவிகளுக்காக அவ்வப்போது எழுத்துமூலம் மற்றும் வாய்மொழி மூலம் அறிவூட்டப்பட்டதுடன் 02 வருமான பரிசோதகர் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் பதவியொன்று வெற்றிடங்களில் உள்ளடங்கியிருந்தது. | கொள்வதற்கும் நடவடிககை எடுக்க வேண்டியமை. | பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் பெறப்பட்டதுடன் ஏனைய வெற்றிடங்களுக்காக இதுவரை உத்தியோகத்தர்கள் கிடைத்திருக்கவில்லை. இந் நிறுவனத்தின் செயற்பாடுகள் பாரிய பிரதேசமொன்றில் பரவியுள்ளதுடன் அச் செயல்களை மேற்கொள்ள மிகை தொழிலாளர்களை நிறுவனத்தின் சேவை தேவைபாட்டின் மீது ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. |

**3.3 சொத்துக்கள் முகாமை**

**3.3.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது மலசலகூடம் மற்றும் இடுகாட்டினை பராமரிப்பது தொடர்பாக 2018 ஆண்டில் பாதிட்டின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 450,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | மிக்க நடைமுறை சாத்தியமாக மந்நும் திட்டமிடலுக்கமைவாக பாதீட்டு ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். | அவசர பழுதுபார்த்தல் வேலைகள் செய்ய நேரிடும் என எதிர்பார்த்து பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் பராமரிப்பு செய்யப்படாததால் இவ்வாறு பணம் எஞ்சியுள்ளது. இடுகாட்டினை சுற்றி கம்பி இடுவதற்காக 2018 ஆண்டு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் இடுகாடு வர்தமாணியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இவ்வாண்டு இடுகாட்டு எல்லை கற்களை செய்து அளவையிட்டு அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்ப நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது. |

**3.3.2 சொத்துக்களிலிருந்த வருமானம் பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக உள்ள 05 பொது மலசல கூடங்களை டென்டர் கோரி அல்லது சபையினால் பராமரித்தேனும் மக்களுக்கு பயன்படுத்த முடியுமான | மக்களுக்கு நலன்புரி சேவைகள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க | மக்களுக்கு பயன்படுத்த முடியுமான விதத்தில் மேம்படுத்தி 05 பொது மலசல கூடங்களை டென்டர் கோரிய போதும் எவரும் டென்டரை |

| | | |
|---|---|---|
| விதத்தில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | பெற்றுக்கொன்டிருக்கவில்லை. |

### 3.3.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 85 இடுகாட்டில் 65 இனை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இடுகாடுகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். | அதிகார பிரதேசத்திலுள்ள 85 இடுகாடுகளில் சபைக்கு சொந்தமான இடுகாடுகளாக 20 மாத்திரமே சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டடுள்ளது. எஞ்சிய 65 இடுகாடுகளின் உறுத்துறுமை பிரதேச செயலளருக்கு சொந்தமானதுடன் அவற்றின் உறுத்துரிமையை சுவீகரித்திற்கொள்ள கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் இதுவரை உறுத்துரிமை சபைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படாததனால் முன் ஏற்பாடுகளை செய்ய முடியாமலுள்ளது. |

### 3.3.4 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டின் ரூபா 2,165,800 தொகையிற்கு கொள்வனவு செய்யப்பட்ட டெக்டரை சாரதி ஒருவர் இல்லாததனால் மீளாய்வாண்டினுள் ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து உரிய பயன்பாட்டை பெறுவதற்கு செயற்பட வெண்டும். | ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் ஆட்சேர்க்க வேண்டி ஏற்படுகின்றது. சுகாதார ஊழியர்களாக அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுத்த போதும் நாட்சம்பளம் ஆயிரம் ரூபாயான குறைந்த தொகை ஆகையால் அதற்காக விண்ணப்பதாரர்கள் முன்வரவில்லை. |

### 3.4 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 20,058,912 ஆன பெறுகைகள் | பெறுகைகள் திட்டமொன்று | 2019 ஆண்டிற்காக 2019 பெப்ரவரி 08 ஆம் திகதி |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்க வேண்டும். | மகாசபை கூட்ட தீர்மான இலக்கம் உ-14 ன் கீழ் 2019 ஆண்டிற்குரிய வழங்கள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்கு பெறுகைகள் திட்டத்தை சபை அங்கீகரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். | தற்போது சரியான முறையில் மேற்கொள்ளபடுகிறது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் DMA/2009(1) மற்றும் 2009 ஜுன் 09 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு கூட்டம் மீளாய்வாணடினுள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2018 ஆண்டின் மூன்றாம் காலாண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் காலாண்டிற்கு ஒரு முறை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |